திருச்சியில் மாவட்ட ஆட்சியர் வளாக கூட்ட அரங்கில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் தாய் சேய் நலனை மேம்படுத்தும் வகையில் சமுதாய வளைகாப்பு நிகழ்வு நகராட்சி நிர்வாகத்துறை துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது. இதில் 100 கர்ப்பிணி பெண்களுக்கு மஞ்சள், குங்குமப்பூ, கண்ணாடி வளையல், பழம் மற்றும் பொன்னான ஆயிரம் நாட்கள் குறித்த மடிப்பேடு அடங்கிய பொருட்களை வழங்கி அட்சதை தூவி வாழ்த்தினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மாநகராட்சி மேயர் அன்பழகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் ரேணுகா , செயற்பொறியாளர் சிவபாதம்,மண்டல குழு தலைவர் விஜயலட்சுமி கண்ணன் மற்றும் விஜி, பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ் போட்டோ கமல் நாகராஜ் இளங்கோ, கிராப்பட்டி செல்வ ம, புஷ்பராஜ், கருப்பையா, மண்டல குழு தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்கொண்டிருக்கிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகளை துவக்கிட தயாராக இருக்கிறது.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால், ஜூலை 2021 முதல் 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து இடப்பட்டுள்ளன. 2,95,339 கோடி ரூபாய் அளவில் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்தும்போது, 4,12,565 நபர்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயமாக கிடைக்கும். அந்த அடிப்படையில்தான், இந்தப் பயணத்தை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

நூற்றுக்கணக்கான நிறுவனங்களுடன் சந்திப்பு!

கேள்வி: சிங்கப்பூர், ஜப்பானை தொடர்ந்து வேறு எந்தெந்த நாடுகளுக்குச் செல்ல திட்டமிட்டிருக்கிறீர்கள்?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: அது பின்னர் தான் முடிவு செய்யப்படும்.

கேள்வி: முதலீடுகள் எவ்வளவு ஈர்க்கப்படவுள்ளது?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்களை நாங்கள் சந்திக்க இருக்கிறோம். அங்கு சென்ற பிறகுதான் முடிவு செய்யப்படும்.

கேள்வி: இந்த பயணம் வெற்றிகரமாக முடியுமா?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: நிச்சயம் வெற்றிகரமாக முடியும். அதற்கு உங்கள் வாழ்த்துகள் தேவை. வாழ்த்துகளை சொல்லி அனுப்புங்கள். நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

25 ஆயிரம் இடங்களில் வளரிளம் பருவத்தினருக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (23.05.2023) தமிழ்நாடு முழுவதும் வளரிளம் பருவத்தினருக்கான 25,000 விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தும் வகையில் சென்னை, சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார். பின்னர் ஆற்றிய உரை வருமாறு:-

கடந்த 2 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்டது. அந்த நிதி நிலை அறிக்கையில் துறைகள் வாரியாக இந்த ஆண்டு முழுவதும் செயல்படுத்திட வேண்டிய திட்டங்கள் குறித்தான அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. அந்த வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முதலாம் ஆண்டில் 110 அறிவிப்புகளும், இரண்டாம் ஆண்டில் 136 அறிவிப்புகளும் வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு, அறிவிப்புகள் குறித்த புத்தகங்கள் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை வரலாற்றில் ஒரு துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் எத்தகைய வகையில் செயல்படுத்தப்பட்டது என்பது புத்தகமாகவே அச்சிட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 106 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியமான அறிவிப்பாகவளரிளம் பருவத்தினர் நல்வாழ்வை மேம்படுத்திடும் வகையில் 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்திற்கு ஒரு முகாம் என்கிற வகையில் நடத்தப்படும்என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 500 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இச்சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த முகாம்களில் 10 முதல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரான மாணவ மாணவியருக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் இரத்த சோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்பு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.தமிழ்நாட்டில் இரத்த சோகை பாதிப்பை பொறுத்தவரை வளரிளம் பெண்களுக்கு 52.9%, வளரிளம் ஆண்களுக்கு 24.6% கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் இரத்த சோகை பாதிக்கப்பட்ட வளரிளம் பருவத்தினர்களை கண்டறிந்து 20 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சை வழங்குவதுடன் இரத்த சோகை இல்லா தமிழ்நாடாக மாற்றுவதே இச்சிறப்பு முகாமின் நோக்கமாகும். தமிழ்நாடு முழுவதும் உள்ள 2127 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 25,524 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 1.2 கோடி வளரிளம் பருவத்தினர் பயனடைவார்கள். இதில் பள்ளி மற்றும் பள்ளி செல்லா வளரிளம் பருவத்தினரும் அடங்குவர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

இந்த துறையில் முதலாம் ஆண்டு வருமுன் காப்போம் என்ற திட்டம், ஒன்றியத்திற்கு 3 மருத்துவ முகாம்கள், ஒவ்வொரு மாநகராட்சிக்கும் 4 முகாம்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கு 15 முகாம்கள் என 1,250 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,260 முகாம்கள் முதலாம் ஆண்டு நடத்தப்பட்டது. அதே போல் கடந்த ஆண்டு 1,250 நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,532 முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்

முன்னோடி திட்டங்கள்

2006-ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, பீகாரில் சானிடரி நாப்கின் மிகவும் அழுக்கான துணிகளையும், கோணிப்பைகளையும் பயன்படுத்தி 4 இளம்பெண்கள் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார்கள் என்ற செய்தி பத்திரிக்கைகளில் வெளியானது. அப்போது நடைபெற்ற பட்ஜட் மீதான விவாதத்தில்நான் மேயராக பெறுப்பேற்றிருந்த அந்த சமயத்தில், தற்போதைய முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் துணை முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய அறிவுறுத்தலை பெற்று 65 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இலவசமாக சானிடரி நாப்கின் கொடுக்கும் திட்டம் கொண்டு வரலாம் என்று யோசனையை தெரிவித்தேன். ஆனால் இது மிகவும் உணர்ச்சிப்பூர்வமான விஷயம் என்பதால் இந்த திட்டம் செயல்படுத்த வேண்டாம் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. உடனடியாக இந்த திட்டத்தை அன்றைய துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உயர் அதிகாரிகள் கொண்டு சென்றனர். உடனடியாக இந்த திட்டத்திற்கு அன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்து கொண்டுவரச் சொன்னார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகராட்சி சார்பில் இந்தத் திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களுக்கு தேவை யான முன்னோடியான திட்டங்களை கொண்டு வரும் வகையில், இன்று வளரிளம் பருவத்தினருக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மாணவ மாணவிகள் பின் பற்றும் போது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் முன்னிலையில் மருத்துவரின் அறிவுறைப்படி மருந்து மாத்திரைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் ஊட்டியில் இரும்புச் சத்து மாத்திரைகளை அதிக அளவில் ஒரு மாணவி எடுத்துக்கொண்டதால், உடல் நலம் பாதிக்கப்பட்டார். எனவே ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் முன்னிலையில் மாணவர்கள் மருத்துவர்கள் வழிகாட்டுதலின்படி மாத்திரைகளை மிக கவனமாக உட்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணைமேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், நிலை குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர். ஜி.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. பத்மஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையம் அருகில், டி.டி.பிளான்சாலையில், சாலையோர மாலைநேர பூங்காவினை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா 19.05.2023 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகராட்சி ஆணையாளர் (பொ) எஸ்.டி.பாலாஜி, வட்டாட்சியர் திருமதி.விஜயலெட்சுமி, நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நகரில் கடந்த 25 ஆண்டுகளாக இருந்து வந்த ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் கூட்டுறவு வீடு கட்டும் சங்க வீட்டுமனை பிரச்சினைக்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. எடுத்த முயற்சியால் தீர்வு காணப்பட்டு தற்போது ரூ.5.75 கோடி மதிப்பில் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ராசிபுரம் நகர்மன்றத் தலைவர் ஆர்.கவிதா சங்கர், கூட்டுறவு சங்கத் தலைவர் ஏ.மதியழகன், செயலாளர் ஜெ.ஜாபர் சாதிக் அலி, துணைப்பதிவாளர் ஹரிகிருஷ்ணன், நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ராசிபுரத்தில் 25 ஆண்டுகளாக இருந்த

கூட்டுறவு சங்க வீட்டுமனை பிரச்சினைக்கு தீர்வு!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முயற்சியால் ரூ.5.75 கோடி மதிப்பில் பணிகள் துவக்கம்!

ராசிபுரம்,மே 25 - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. எடுத்த முயற்சியால் கடந்த 25 ஆண்டுகளாக இருந்து வந்த ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் கூட்டுறவு வீடு கட்டும் சங்க வீட்டுமனை பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு தற்போது ரூ.5.75 கோடி மதிப்பில் பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் நகரில் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் கூட்டுறவு சங்கம் சார்பில் 1997ஆம் ஆண்டு நிலம் வாங்கப்பட்டு உறுப்பினர்கள் மனைப்பிரிவு நிலம் பிரித்து வழங்கும் வகையில், திட்டம் வகுக்கப்பட்டு 7.85 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இதன் பின்னர் இதில் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் திட்டம் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. மேலும், நீதிமன்ற வழக்கு போன்றவற்றால் காலதாமதம் ஏற்பட்டது. 25 ஆண்டுகளாக உறுப்பினர்களால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இதனை செயல்படுத்த முடியாத நிலை இருந்து வந்தது.

இதையடுத்து சங்க நிர்வாகிகள் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமாரை சந்தித்து 25 ஆண்டு காலமாக நடைபெற்று வரும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி எடுத்த முயற்சியின் காரணமாக தற்போது இந்த நிலத்தை உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்கும் வகையில், நீதிமன்ற உத்தரவு பெற்று மனைப்பிரிவுக்கு நகர ஊரமைப்பு இயக்குனரகத்தின் அனுமதி பெறுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது இதற்கான பணிகள் துவக்க விழா ராசிபுரம் நகர்மன்றத் தலைவர் ஆர்.கவிதா சங்கர் தலைமையில் நடைபெற்றது. ராசிபுரம் வட்ட ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் கூட்டுறவு சங்கத் தலைவர் ஏ.மதியழகன், கூட்டுறவு சங்க துணைப் பதிவாளர் ஹரிகிருஷ்ணன், சங்கச் செயலாளர் ஜெ.ஜாபர் சாதிக் அலி, நகர தி.மு.கழகச் செயலர் என்.ஆர்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பூமிபூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

பின்னர் இதுகுறித்து பேசிய கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, நீண்ட கால பிரச்சினையான இதனை உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நிலத்தில் மனைகள், சாலை அமைப்பு, மின் வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, சாக்கடை வசதி போன்றவை ரூ.5.75 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனையடுத்து நகர ஊரமைப்பு இயக்குனரகத்தின் அனுமதி பெறப்பட்டு உறுப்பினர்களாக உள்ள 158 ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு மனைகள் பிரித்து வழங்கப்படும் என்றார்.

அமைச்சர்கள் எஸ். ரகுபதி - சிவ.வீ.மெய்ய நாதன் முன்னிலையில்

ஆர்.ரெத்தினவேல் - பிரகதா இல்ல மண விழா வரவேற்பு!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

புதுக்கோட்டை மே 25 - முதலமைச்சர்,தலைவர்தளபதி அவர்கள் நல்வாழ்த்துகளுடன், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுக்கா, கல்லாலங்குடி தலைவர்ஆர்.ரெத்தினவேல் ஒன்றிய கவுன்சிலர் பிரகதா ஆகியோர் இல்ல திருமண வரவேற்பு விழா, கல்லாலங்குடி ராஜபாக்கியம் மண விழா அரங்கிள் (ரீகுரு ராகவேந்திர திருமண மஹால் எதிரில்) இன்று (25.5.2023 - வியாழக்கிழமை) மாலை 5.30மணிமுதல்இரவு9மணி வரை நடைபெறுகிறது.

விழாவில் இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்கள் டாக்டர்ஆர்.வெங்கடேசன் டாக்டர் ஆர்.மோனிஷா ஆகியோரை வாழ்த்துகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா, தெற்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், எஸ்.திருநாவுக்கரசு எம்பி,கம்பன் கழகத் தலைவர் எஸ்.ராமச்சந்திரன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, எம்.எம்.அப்துல்லாஎம்பி,முன்னாள்சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, மாநில இலக்கிய அணி துணைத்தலைவர்கவிச்சுடர்கவிதைப்பித்தன்,மாநில மருத்துவ ரணி துணை செயலாளர் டாக்டர் ஆர்.அண்ணாமலை,மாநிலவர்த்தகஅணி செயலாளர் காசி.முத்துமாணிக்கம்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் மாநில, மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் த.சந்திர சேகரன், அரு.வீரமணி, இ.ஏ.பரணிகார்த்திகேயன், சுப.சரவணன்,என்.அசோக்கம், மு.வரதராஜன், வெங்கடேசன், திருநாவுக்கரசு, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், எஸ்.பி.முத்துராமன், பெரி.பன்னீர்செல்வம், எஸ்ஆர்.வடிவேலு, டி.கணேசன், சிவ.பால.இளங்கோ, அரசு பொது வழக்கறிஞர் பா.வெங்கடேசன், சீனி.பழனியப்பன், கே.தட்சிணாமூர்த்தி,மாஞ்சன்விடுதிஆர்.பாலசுப்பிரமணியன்,கேவி.சுப்பையா,கேபிகேடி.பாஸ்கர்,ராஜசரவணன், கோவில்பட்டிமு.கருணாகரன்,எஸ்.திருப்பதி, க.சத்தியமூர்த்தி, எஸ்விடி.செங்கோல், வீர.மெய்யர்,ஏவி.தியாகராஜன், வி.வீரமணி, எஸ்ஆர்.முருகேசன், எஸ்என்.மன்னாதிமன்னன், செ.வெங்கடேசன், கே.அண்ணாத்துரை, கே.அன்பு, எஸ்.செல்வம், ஆர்.மகிமைநாதன், மணிப்பள்ளம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றன்.

திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கேபிகேடி.தங்கமணி, ஒன்றிய செயலாளர் அரு.வடிவேலு நன்றி கூறுகின்றனர்.

கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (25.05.2023 - வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) தளபதி கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் / பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. கழக வளர்ச்சி பணிகள்

வி.செந்தில்பாலாஜி
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்